## தலைப்பு 112 – வெளிநாட்டு அமைச்சு

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வெளிநாட்டு அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று. அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றினை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) உறுப்புரையின் பிரகாரம் வெளிநாட்டு அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 23 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெளிநாட்டு அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை.**

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) நிதிக்கூற்றுக்கள் பின்வரும் விடயங்களில் ஏற்பட்ட வித்தியாசங்களால் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| **(i)** | 3 செலவீன விடயங்களில் தொடர்பில் முன்னைய ஆண்டு மீதிக்கும் மீளாய்வாண்டிற்கான நேரொத்த மீதிக்கும் இடையில் ரூபா 437,797,441 மொத்த வித்தியாசமொன்றிருந்தது. | 2021 ஆம் ஆண்டிற்காக காசு மற்றும் குறுக்குப் பதிவுகளுடன் காசுப்பாய்ச்சல் கூற்றைத் தயாரிப்பதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், இது 2020 ஆம் ஆண்டிற்காக காசு அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தது. மீண்டும் 2021 இல் அறிவுறுத்தல்களுக்கு இணங்க கணக்குகள் தயாரிக்கப்பட்டமையால் வித்தியாசம் வெளிப்பட்டது. | முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வில் அறிக்கையிடப்பட்ட பெறுமதிகளுக்கு நேரொத்ததாக சரியான பெறுமதிகள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| **(ii)** | முன்னைய ஆண்டின் காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 437,731,433 தொகையான மானியங்கள் மற்றும் மாற்றல்கள் முன்னைய ஆண்டின் காசுப்பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் அந்தத் தொகை மீளாய்வாண்டிற்கான காசுப்பாய்ச்சல்கூற்றில் காட்டப்பட்டிருக்காததுடன் முன்னைய ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றில் திறைசேரிக்கு தீர்க்கப்பட்ட கட்டுநிதி மீதி இருக்காததுடன் முன்னைய ஆண்டு தொடர்பில் காசுப்பாய்ச்சல்கூற்றில் | அந்தத் தொகையின் வகைப்படுத்தலில் வழுவொன்று இருந்தது என ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்தத் தொகை தனிப்பட்ட வேதனங்கள் மற்றும் செயற்பாட்டு செலவீனங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. திறைசேரி கட்டுநிதியின் பெறுகை உள்ளடங்கலாக பெறப்பட்ட கட்டுநிதி கணக்கீட்டு சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் | முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களிலுள்ள மீதிகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| திறைசேரிக்கு தீர்க்கப்பட்ட கட்டுநிதி மீதியாக ரூபா 943,415 மீளாய்வாண்டில் காட்டப்பட்டிருந்தது. | பதியப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டின் கட்டுநிதி மாற்றல்கள் வெளிநாட்டு அமைச்சிற்கு மாத்திரம் வழங்கப்பட்டது. அதற்கிணங்க, 2020 இன் கணக்கு 2021 இன் வழிகாட்டலின் பிரகாரம் ஒப்பீட்டுத் தன்மையை பராமரிப்பதற்கு மீண்டும் தயாரிக்கப்பட்டிருந்தது. |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கட்டுநிதி இணக்க கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஏனைய தலைப்புக்களினால் முற்பண ‘‘பீ’’ கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட செலவுகளின் பெறுமதி ரூபா 8,115,205 ஆகவிருந்ததுடன் பெறுமதியானது ரூபா 8,106,458 ஆக கட்டுநிதி இணக்கக்கூற்றில் மாற்றியமைக்கப்பட்டது. | இணங்கப்பட்டது. | கட்டுநிதி இணக்கக்கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய பெறுமதி சரியாக பதிவுசெய்யப்பட வேண்டும். |
| (ஆ) | ஏனைய தலைப்புக்களினால் முற்பண ‘‘பீ’’ கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட வரவுகளின் பெறுமதி ரூபா 304,973 ஆகவிருந்ததுடன் பெறுமதியானது ரூபா 313,723 ஆக கட்டுநிதி இணக்கக்கூற்றில் மாற்றியமைக்கப்பட்டது. | இணங்கப்பட்டது. | -மேற்கூறப்பட்டவாறு- |

## 1.6.2 கட்டுநிதி இணக்க கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | திறைசேரி கணினி அச்சு குறிப்பின் பிரகாரம் வைப்பு பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 2,094,037,896 ஆக காணப்பட்ட போதிலும் நிதிச்செயலாற்றல்க் கூற்றில் ரூபா 2,076,010,925 ஆக இருந்தமையால் ரூபா 18,026,971 ஆன வைப்பு பெறுவனவு நிதிச்செயலாற்றல்க்கூற்றில் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | CIGAS மேசைக்கணனி பரீட்சை மீதியின் வைப்புக் கணக்குகளிலுள்ள பெறுவனவுகள் நிதிச்செயலாற்றல்க் கூற்றிற்கு கொண்டுவரப்பட வேண்டுமென திறைசேரியினால் அறிவுறுத்தல்கள் கொடுக்கப்பட்டிருந்தது. பரீட்சைமீதியிலுள்ள மொத்த வைப்புப் பெறுவனவுகள் ரூபா 2,076,010,925 ஆகவிருந்தது. இது கணக்குகளில் சரியாக சீர்செய்யப்பட்டிருந்தது. | அரச கணக்குகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட 2021/03 வழிகாட்டல்களுக்கு இணங்க கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிச்செயலாற்றல் கூற்றின் பிரகாரம் முற்பணப்பெறுவனவுகள் ரூபா 51,762,773 ஆக காட்டப்பட்டிருந்த போதிலும் திறைச்சேரி கணினி அச்சு குறிப்பின் பிரகாரம் அத் தொகை ரூபா 51,771,520 ஆக காட்டப்ட்டிருந்தமையால் ரூபா 8,747 ஆல் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. மேலும், திறைச்சேரி கணினி அச்சு குறிப்பின் பிரகாரம் முற்பணக்கொடுப்பனவின் பெறுமதி ரூபா 39,143,701 ஆக காட்டப்பட்டிருந்தபோதும் ரூபா 39,134,951 ஆக நிதிச்செயலாற்றல்க்கூற்றில் காட்டப்பட்டிருந்தமையால் முற்பணக்கொடுப்பனவு ரூபா 8,750 ஆல் கூட்டிக்காட்டப்பட்டிருந்தது. | கணனி வழுக்கள் ஏற்பட்டிருந்தது என ஏற்றுக்கொள்ளப்பட்டது. | -மேற்கூறப்பட்டவாறு- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | திறைச்சேரி கணினி அச்சு குறிப்பின் பிரகாரம் நிதிச்செயலாற்றல் கூற்றில் காட்டப்பட வேண்டிய வைப்புக்கொடுப்பனவுகள் ரூபா 2,073,640,054 ஆகவிருந்தபோதும் இது ரூபா 2,050,025,630 ஆக குறிப்பிடப்பட்டமையால் நிதிச்செயலாற்றல்க் கூற்றானது ரூபா 23,614,424 ஆல் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | சிகாஸ் மேசைக்கணனியின் பரீட்சைமீதியின் வைப்புக்கணக்குகளின் பெறுகை மீதியானது நிதிச்செயலாற்றல்கூற்றில் காட்டப்பட வேண்டுமென திறைசேரியால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டது. பரீட்சைமீதியிலுள்ள வைப்புக் கொடுப்பனவுகளின் மொத்த மீதி ரூபா 2,050,025,630 ஆகவிருந்தது. இது கணக்குகளுக்கு சரியாக திருத்தப்பட்டிருந்தது. | அரச கணக்குகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட 2021/03 வழிகாட்டல்களுக்கு இணங்க கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

**1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று**

---------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் தனிநபர் வேதனம் மற்றும் செயற்பாட்டு செலவின பெறுமதி ரூபா 10,837,484,562 ஆகவிருப்பினும் காசுப்பாய்ச்சல் கூற்றில் அப் பெறுமதி ரூபா 11,183,873,316 என குறிப்பிடப்பட்டிருந்தமையினால் ரூபா 346,388,754 அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது. | திறைசேரி அறிவுறுத்தல்களின் பிரகாரம் சிகாஸ் மேசைக்கணனி பரீட்சை மீதியில் குறிப்பிடப்பட்ட தொகையை அடிப்படையாகக்கொண்டு காசுப்பாய்ச்சல்க்கூற்று தயாரிக்கப்பட்டது. அதற்கிணங்க, பெறுமதி பதியப்பட்டது எனவும் அத்தகைய வித்தியாசங்கள் இருக்கவில்லையெனவும் அறிவிக்கப்பட்டது. | ஒருங்கிணைந்த பரீட்சை மீதியினை அடிப்படையாகக் கொண்டு காசுப்பாய்ச்சல்க்கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஒருங்கிணைந்த பரீட்சைமீதியின் பிரகாரம் மானியங்கள் மற்றும் மாற்றல்கள் ரூபா 470,003,154 ஆகவிருந்தமையால் இது காசுப்பாய்ச்சல் கூற்றில் பெறுமதியில்லையென காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 470,003,154 தொகை குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | அந்தத்தொகையினை வகைப்படுத்தலில் வழு ஏற்பட்டது என ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்தத் தொகையானது தனிப்பட்ட வேதனங்கள் மற்றும் செயற்பாட்டுச் செலவீனங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்று வகைப்படுத்தல்களை சரியாக மேற்கொள்வதன்மூலம் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | காசுப் பாய்ச்சல் கூற்றின் கீழ் பௌதீக சொத்து கொள்வனவு மற்றும் ஏனைய முதலீடுகள் கையகப்படுத்தல் என ரூபா 187,030,142 காண்பிக்கப்பட்டிருப்பினும் ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் மீளாய்வாண்டின் சொத்து கையகப்படுத்தல் ரூபா 63,415,742 ஆக காணப்பட்டமையால் ரூபா 123,614,400 தொகை அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது. | அமைச்சால் ஏற்பட்ட முதலீட்டுச் செலவீனம் பௌதீகச்சொத்துக்களின் நிர்மாணம் அல்லது கொள்வனவு மற்றும் ஏனைய முதலீடுகளின் சுவீகரிப்பின் கீழ் காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க, ரூபா 187,030,142 தொகை காட்டப்பட்டிருந்ததுடன் இது திறைசேரி அறிவுறுத்தல்களின் பிரகாரம் இது மேசைக்கணனி பரீட்சைமீதியுடன் இணங்குகின்றது. | மேற்கூறப்பட்டவாறு- |

## 1.6.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

---------------------------------------------------

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் கணக்காய்வு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள |
|---|---|---|---|
| (அ) | 13 வெளிநாட்டு தூதரகங்களுடன் தொடர்புடைய பல மீண்டுவரும் மற்றும் மூலதன கொடுப்பனவு பற்றுச்சீட்டு பொதிகளின் பெறுமதிகள் தவிர்ந்த 54 தூதரகங்களிற்கு தொடர்புடைய ரூபா 6,315,346,016 ஆன மீண்டெழும் செலவினம் மற்றும் ரூபா 91,171,076 ஆன மூலதன செலவினங்களை பரீட்சிப்பதற்கு தொடர்புடைய பற்றுச்சீட்டுப் பொதிகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை. | பொதிகளினை கொண்டுவரும் போக்குவரத்துச்செலவு அதிகரித்தமையால் பல தூதரகங்களிலிருந்து கொடுப்பனவு பற்றுச்சீட்டு பொதிகளினை பெறுவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. அத்துடன், நாட்டிற்குரிய பல தூதரகங்களிலிருந்து கொடுப்பனவு பற்றுச்சீட்டுக்களின் பெறுகை தாமதமடைந்திருந்தது. | அனைத்து கொடுப்பனவு வவுசர்களையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 55,984,547 பெறுமதியான முடிவடையாத கட்டிடங்களின் உரிமையாண்மை மற்றும் உள்ளதன்மையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | பதில் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிமையாண்மை மற்றும் உள்ளதன்மையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட முன்னைய ஆண்டிற்கான வைப்புப் பெறுமதி மற்றும் முற்பணப் பெறுகைகள் முறையே ரூபா 1,452,471,015 மற்றும் ரூபா 43,380,027 ஆகவிருந்த போதும் இந்தப் பெறுமதிகள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்காமையால் இணக்கக்கூற்றொன்று கணக்காய்விற்கு சமரப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | முன்னைய ஆண்டிற்கான இணக்கக்கூற்றுக்கள் எதிர்காலத்தில் சரியாக சமர்ப்பிக்கப்படும் என குறிப்பிடப்பட்டது. | முற்பணங்களின் வைப்புக்கள் மற்றும் பெறுகைகள் போன்றவற்றின் இணக்கக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | ரூபா 9,730,692,636 பெறுமதியான அலுவலக்கட்டிடங்கள், ரூபா 1,055,280,776 பெறுமதியான பயணிகள் வாகனம், ரூபா 1,010,362,062 தொகையான கலவை நகரச் சொத்துக்கள், ரூபா 317,741,508 பெறுமதியான அலுவலக வதிவிடங்கள் மற்றும் மீளாய்வாண்டின் போது அகற்றப்பட்ட ரூபா 39,119,254 தொகையான வாகனங்கள் மற்றும் ரூபா 63,415,740 தொகையான சுவீகரிக்கப்ட்ட சொத்துக்கள் தொடர்பில் ஒவ்வொரு சொத்தையும் தனித்தனியாக இனங்காணக்கூடிய வகையில் நிலையான சொத்துப்பதிவேடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | திறைசேரியின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் புதிய CIGAS முறைமையின் தொடக்கத்துடன் இணங்கும் வகையில் தனியான இனங்காணப்படக்கூடிய ஒவ்வொரு சொத்துக்களிற்கும் நிலையான சொத்துக்கள் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லையெ யன்பதுடன் அவை புதிய CIGAS முறைமையில் பதியப்பட்டிருக்கவில்லை. | பதிவேடுகள் பராமரிக்கப்பட்டால் மாத்திரமே சொத்துக்கள் தனியாக இனங்காணப்பட முடியும். |

## 2 நிதிசார் மீளாய்வு

## 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகினறன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | **7002-0-0-035/13 ஆம் இலக்க கட்டுநிதி கணக்கு** | | |
| (i) | முன்னைய ஆண்டில் 2013 ஆண்டு மற்றும் அதற்கு முன்னரான காலப்பகுதிக்கு தொடர்பான கட்டுநிதி கணக்கு மீதி ரூபா 91,530,099 ஆக இருந்தபோதும் மீளாய்வாண்டின் கட்டுநிதி கணக்கின் மீதி ரூபா 89,919,237 ஆக காணப்பட்டதுடன், அதில் 1.7 குறைவான சதவீதமான ரூபா 1,610,863 மாத்திரம் மீளாய்வாண்டின் போது தீர்க்கப்பட்டிருந்தது. ரூபா 89,919,237 தொகையான கட்டுநிதிக் கணக்கு மீதி தீர்க்கப்படாத முற்பணங்களினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது. | இப்போதிலிருந்து ஒவ்வொரு தூதரங்களிடமிருந்து விபரங்களை பெறுவதற்கும் 2013 ஆம் ஆண்டில் அவர்களிடமிருந்து அறவிவேண்டியவற்றை அறவிடுவதற்கும் தீர்ப்பனவு செய்வதற்கும் அமைச்சால் துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றது. | துரிதமாக நிலுவை முற்பணங்களை அறவிடுவதற்கும் முறையான அனுமதியுடன் பதிவழிப்புச் செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | தூதரக சேவைகளுக்காக வெளிநாடு சென்ற பதவியணியினருக்கு பெற்றுக் கொடுக்கின்ற வீடுகளுக்காக வைக்கப்பட்ட 248 பாதுகாப்பு வைப்புக்களிற்காக செலுத்தப்பட்ட முற்பணங்கள் ரூபா 60,051,898 இனை கொண்டுள்ளது. அந்த 248 உத்தரவாத/பாதுகாப்பு வைப்புக்களில் ரூபா 478,980 தொகையான பாதுகாப்புவைப்புத் தவிர்ந்த ரூபா 59,572,918 தொகையான 247 மீதமுள்ள வீடுகளுக்கான பாதுகாப்பு வைப்புக்களில் இப்போது தூதரங்க பதவியணியினர் பயன்படுத்தாத வீடுகளுக்காக வைக்கப்பட்டிருந்த வைப்புக்களின் பெறுமதியாக ஆக காணப்பட்டது. அவ் வைப்புப் பெறுமதியில் ரூபா | பாதுகாப்பு வைப்புக்கள் அறவிடப்படுவதற்காக அமைச்சினால் வெளிநாட்டு தூதுவர் சபைக்கு அவ்வப்போது உள்ளக சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டன. மேலும், அவ் வைப்புக்கள் அறவிடப்படுவதற்காக வெளிநாட்டு தூதரக சபைகளிடமிருந்து விசாரித்து தேவையான தகவல்கள் பெறப்பட்டது. அதன் பிரகாரம் அவ் வைப்புக்கள் மீண்டும் அறவிடப்படுவதற்கு எதிர்காலத்தில் குறித்த முறைமையொன்று பின்பற்றப்படுவதற்கு | வெளிநாட்டு தூதரக சபை பதவியணியினரினால் பயன்படுத்தப்படாத வீடுகளுக்காக வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வைப்புக்கள் அறவிடப்படுவதற்கு முறைமையொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 12,440,021 தொகை 20 ஆண்டுகளை கடந்திருந்ததுடன், ரூபா 43,292,731 ஆனது 10 ஆண்டுகளுக்கும் 20 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்தினுள்ளும், எஞ்சிய வைப்புக்கள் மீதி ரூபா 3,840,166 ஆனது 07 ஆண்டுகளை கடந்திருந்தது. அவ் வைப்புக்கள் அறவிடப்படல் தொடர்பாக வெளிநாட்டு அமைச்சின் கரைகடந்த நிர்வாகப் பிரிவு பணிப்பாளர் நாயகத்தினால் 2009 செப்தெம்பர் 01 திகதிய 250 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கை ஊடாக ஆலோசனைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருப்பினும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு அவ் வைப்பு தொகை மீண்டும் பெற்றுக் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| **(iii)** | ரூபா 29,867,341 பெறுமதியான 127 தற்காலிக இடைநிலை உப கட்டுநிதிகள் காணப்பட்டதுடன், அதில், ரூபா 699,358 தொகையானது 20 வருடங்களை விஞ்சியிருந்ததுடன் ரூபா 12,840,889 ஆனது 10 ஆண்டுகளுக்கும் 20 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்தினுள்ளும், எஞ்சிய வைப்புக்கள் மீதி ரூபா 16,327,094 ஆனது 07 ஆண்டுகளை கடந்திருந்தது. அதன் பிரகாரம் நிதி பிரமாணம் 371 இன் பிரகாரம் தற்காலிக இடைகால கட்டுநிதி அப்பணிகள் நிறைவடைந்தவுடனே தீர்க்கப்பட வேண்டியிருப்பினும் அப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், வழங்கப்பட்ட 72 முற்பணங்களின் நோக்கத்தை தீர்ப்பதற்கு இயலாதிருந்தது. | முன்னைய ஆண்டுகளில் சில தற்காலிக விடயங்களிற்காக கொடுக்கப்பட்ட உப கட்டுநிதிகளை முறையாக அறவிடுவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியாதிருந்த போதும் பணிகள் முடிவடைந்த பின்னர் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதனை முறையாக தீர்ப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பணி நிறைவடைந்தவுடன் முற்பணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | **7002-0-0-035/21 ஆம் இலக்க கட்டுநிதி கணக்கு** | | |
| **(i)** | மீளாய்வாண்டின் கட்டுநிதி கணக்கு மீதியில் ரூபா 344,210,756 தொகையொன்று துாதரக சேவைக்காக வெளிநாடு சென்ற | சில நேரங்களில் துாதரகங்களுக்கு புதிதாக வருகின்ற உத்தியோத்தர்களுக்கு | வெளிநாட்டு துாதரக உத்தியோகத்தர்களின் சேவை முடிவுறுத்தும் |

| | | | |
|---|---|---|---|
| | பதவியணியினருக்கு பெற்றுக் கொடுக்கின்ற வீடுகளுக்காக வைக்கப்பட்ட பாதுகாப்பு வைப்பாகவிருந்தது. 46 வைப்புக்கள் தொடர்பான ரூபா 19,536,652 தொகையொன்று துாதரக உத்தியோகத்தர்களால் தீர்க்கப்படாதிருந்தது. அந்தப் பிணை வைப்புக்களில் ரூபா 3,020,376 தொகையானது 10 ஆண்டுகளை விஞ்சி காணப்பட்டதுடன் ரூபா 16,516,276 தொகையானது 04 ஆண்டுகள் தொடக்கம் 10 ஆண்டுகள் வரையான காலப்பகுதியினுள் பெறுமதி வைப்புக்களாகவிருந்தது. | மேற்கூறப்பட்ட வீடுகளை கையளிக்கின்றமையால் முதல் சந்தர்ப்பத்தில் செலுத்தப்பட்ட முற்பணத்தை தீர்ப்பனவு செய்வதற்கு ஆகக்குறைந்தது 03 வருடங்களிலிருந்து 20 வருடங்களுக்கு மேலாக கடந்திருந்ததுடன் அந்த முற்பணங்கள் பாதுகாப்பு வைப்புக்களாக பராமரிக்கப்பட்டது. விடப்பட்ட வீடுகள் தொடர்பான தீர்க்கப்படாத முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டது. | சந்தர்ப்பத்தில் வீடுகளுக்காக வைக்கப்படுகின்ற பாதுகாப்பு வைப்புக்களை அறவிடுவதற்கு முறைமையொன்று தயரிக்கப்படல் வேண்டும். |
| **(ii)** | தூதரகங்களில் தீர்க்கப்படாத முற்பணம் ரூபா 21,024,362 தற்காலிக இடைக்கால கட்டுநிதி காணப்பட்டதுடன், அவ் முற்பணத்தினுள் 2018 ஆம் ஆண்டிற்கு முன் காலத்திற்கு தொடர்புடைய ரூபா 3,931,910 உம், 2019 ஆம் ஆண்டிற்கு தொடர்படையதாக ரூபா 2,433,646 உம், 2020 ஆம் ஆண்டிற்கு தொடர்புடைய ரூபா 4,272,499 உம் ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி பிரமாணம் 371 இன் பிரகாரம் அத்தகைய தற்காலிக இடைகால கட்டுநிதி தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவ்வாறான தற்காலிக இடைக்கால கட்டுநிதி முறையாக அப் பணிகளின் இறுதியில் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு தொடர்புடைய தூதரங்களுக்கு சுற்றறிக்கை ஊடாக ஆலோசனை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பணி நிறைவடைந்தவுடனே முற்பணம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 28 செலவு விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பணத்தில் 51 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையான வீச்சில் மொத்த பெறுமதி ரூபா 561,669,027 ஆன | ரூபா 561,669,027 ஆன தொகையான ஏற்பாட்டின் குறைப்பயன்பாடு காணப்பட்டது என இணங்கப்பட்டதுடன் திறைசேரியால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை பின்பற்ற வேண்டிய தேவையிருந்ததுடன் | நிதிப்பிரமாணம் 50(II) இன் பிரகாரம் இயன்றளவு மதிப்பீடுகள் முழுமையாகவும் சரியாகவும் |

| | | |
|---|---|---|
| நிதியேற்பாடு குறைப்பயன்பாடுடன் காணப்பட்டது. | கொரானா பரவலானது எதிர்பார்க்கப்பட்ட செலவை ஏற்படுத்தமுடியாதிருந்தது. | தயாரிக்கப்பட வேண்டும். |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகளுக்கு உட்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட குறிப்பு இலக்கம் iii இன் கீழுள்ள கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று ஒவ்வொரு செலவினத்தலைப்பின் கீழ் திறைசேரியால் வழங்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் (எஸ்ஏ – 92 ) கூற்றுடன் இணங்க வேண்டிய போதும் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் குறிப்பு இலக்கம் iii கீழ் காட்டப்பட்ட தொகை ரூபா 115,320,800 ஆகவிருந்ததுடன் எஸ்ஏ – 92 இன் பிரகாரம் இது ரூபா 250,194,868 ஆகவிருந்தது. | அமைச்சின் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான தகவல்கள் சரியாக பெறமுடிந்திருந்த போதும், அத்திகதியிலுள்ளவாறு கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான தகவல்களை பெறுவது கடினமாகவிருந்தது. ஆகையால், உரிய 02 படிவங்களிற்கிடையில் ஒப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை யென அறிவிக்கப்பட்டது. தூதரகங்களின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் இது தொடர்பில் அறிவிக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் அத்தகைய வழுக்கள் ஏற்படுவதை தடுப்பதற்கு நடவடிக்கைகள எடுக்கப்படும். | இது கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றுடன் இணங்க வேண்டும் (எஸ்ஏ – 92 குறிப்பு இலக்கம் iii) |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசு தாபன விதிக்கோவையின் | அலுவலக தங்குமிடங்களிலுள்ள இலத்திரனியல் உபகரணங்களின் இருப்பு மற்றும் ஏனைய உபகரணங்கள் மற்றும் பொருத்துக்கள் மற்றும் ஏனையவற்றின் | அலுவலக வதிவிடங்கள் தொடர்பிலான இருப்புப் | உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | அத்தியாயம் XIX இன் 8.1 மற்றும் 8.2 ஆம் பிரிவுகள் | இருப்பு தங்குமிடங்களின் பராமரிப்புடன் பொறுப்பாகவுள்ள அதிகாரசபையால் பேணப்படவேண்டியிருந்தபோதும் வெளிநாட்டு அமைச்சின் 27 அரச வதிவிடங்கள் தொடர்பில் அத்தகைய அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிவேடுகளைப் பராமரிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட போதும் இது நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. இருந்தபோதிலும், இப்போது இருப்புப் பதிவேடுகளை நாளதுவரையாக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவை | | | |
| i. | நிதிப் பிரமாணம் 104 (1) | 1 ஆண்டு தொடக்கம் 10 ஆண்டுகள் வரை காலம் கடந்திருந்த ரூபா 3,990,669 ஆன 13 வாகன விபத்துக்கள் தொடர்பாக மற்றும் 2010 ஆம் ஆண்டில் ஏற்பட்டிருந்த ரூபா 1,991,695 ஆன வாகனம் திருடல் தொடர்பாக பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், நட்டம் அல்லது சேதம் ஏற்பட்டவுடன் அதன் அளவு மற்றும் அதற்கான காரணம் மற்றும் அதற்கு பொறுப்பானவர்களை தீர்மானிப்பதற்கு விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதும், 01 தொடக்கம் 05 வருடங்கள் காலப்பகுதியினுள் 05 தூதரகங்களுடன் தொடர்பாக ஏற்பட்ட ரூபா 403,777 தொகையான பொருட்களின் நட்டங்கள் தொடர்பில் அதற்கிணங்க விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுப்பதற்கும் அதனை எதிர்காலத்தில் அறிவிப்பதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | நிதி பிரமாணம் 104 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| ii. | நிதி பிரமாணம் 106 | 09 வருடங்களிலிருந்து 15 வருடங்கள் வரையான காலப்பகுதியின் போது ஏற்பட்ட ரூபா 17,201,664 தொகையான 05 தூதரகங்களில் ஏற்பட்ட பண இழப்பு தொடர்பில் ரூபா 16,141,919 தொடர்பில் எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கை பூர்த்தியாக்கப்பட்டிருக்காததுடன் மிகுதி தொடர்பில் நிதிப்பிரமாணங்கள் | பணம் திருடல் தொடர்பாக கொழும்பு உயர் நிதிமன்றத்தில் இரண்டு வழக்குகள் தொடுக்கப்பட்டு | நிதி பிரமாணம் 106 பிரகாரம் காணாமல் போன பணம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ள்ளதுடன் விசாரணைகள் தற்போது இறுதிக்கட்டத்திலுள்ளது. ஏனைய சேதங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |
| iii. | நிதி பிரமாணம் 371(5) | ஒதுக்கப்பட்ட வேலை முடிவடைந்ததும் உப கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டியிருந்த போதும் ரூபா 1,804,674 தொகையான 12 துாதரகங்களுக்கு கொடுக்கப்பட்ட தீர்க்கப்படாத முற்பணங்கள் 7 வருடங்கள் தொடக்கம் 28 வருடங்கள் காலப்பகுதிக்குரியதாகும். | எதிர்காலத்தில் அத்தகைய வேலைகள் முடிவடைந்ததும் உபகட்டுநிதிகளை அறவிடுவதற்காக சுற்றறிக்கையினூடாக அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. | நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் வேலை முடிவடைந்ததும் உப கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டும். |
| iv. | நிதி பிரமாணம் 565(5) | ஒவ்வொரு மாதத்திற்காகவும் தயாரிக்கப்பட்ட மாதாந்த வைப்பு பொழிப்பறிக்கை அடுத்த மாதம் நிறைவடைவதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டியிருப்பினும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு துாதரகங்களிடமிருந்தும் மாதாந்த கணக்கு பொழிப்புக்கள் மற்றும் கணக்கு அறிக்கைகள் பெற்ற பின்னர் துாதரகங்கள் தொடர்பான நாளதுவரையாக்கல் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் ஒவ்வொரு மாதத்திற்காகவும் மாதாந்த வைப்பு பொழிப்பறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பபப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| v. | நிதி பிரமாணம் 571 | வைப்பு செய்யப்பட்ட திகதியிலிருந்து 2 ஆண்டுகள் விஞ்சிய உரிமை கோரப்படாத வைப்புக்கள் அரசின் வருமானத்திற்கு எடுக்கப்பட வேண்டியிருப்பினும், அமைச்சினால் ரூபா 32,601,682 ஆன வைப்புக்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இரண்டு ஆண்டுகளை விஞ்சிய வைப்புக்கள் காலாண்டுக்கு ஒருமுறை பகுப்பாய்வு செய்து அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. | 2 ஆண்டுகளை விஞ்சிய வைப்பு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2015 ஒக்தோம்பர் 09 திகதிய பீஎவ்டி/ஆர்ஈடி/2015/08 பொது (i) ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 4.3 (உ) (i) மற்றும் (ii) ஆம் பிரிவுகள். | சுற்றறிக்கையின் பிரகாரம் அரச உத்தியோகத்தர்களின் காலாவதியாகிய முற்பணத்தை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருப்பினும் அதில் 05 ஆண்டுகளுக்கு மேலாகவுள்ள ரூபா 1,499,176 ஆன தொகையான இனங்காணப்படாத கடன் அறவிடப்படாது காணப்பட்டது. | இறந்த/ஓய்வுபெற்ற/இடைநிறுத்தப்பட்ட/மற்றும் சேவையிலிருந்து போனவர்களின் தனிப்பட்ட கோவை மற்றும் கடன் கோவைகளை பரீட்சிப்பதன் மூலம் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அறிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் காலாவதியாகிய அரச உத்தியோகத்தர்களின் முற்பணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 2017 திசெம்பர் 29 ஆந் திகதிய 262/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் திணைக்கள சுற்றறிக்கை | ஓய்வுபெற்ற மற்றும் மரணமடைந்த உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் உடனடியாக தீர்க்கப்பட வேண்டியிருந்தபோதும் 06 மரணமடைந்த உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 465,050 செலவு மீதியொன்றிருந்ததுடன் அதில் ரூபா 273,560 கடன் மீதி 05 வருடங்களுக்கு மேலாக நிலுவையிலிருந்தது. | மேற்கூறப்பட்ட வாறு- | - மேற்கூறப்பட்ட வாறு- |
| (உ) | 2006 இன் அரச பெறுகை வழிக்காட்டி கோவையின் 4.2.1 மற்றும் 4.2.2 வழிக்காட்டிகள் | குறைந்த பட்சம் 3 ஆண்டு காலத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகள் பட்டியலிடப்பட்டு பிரதான பெறுகை திட்டமும் பெறுகை நேர அட்டவணையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போதுள்ள குறைபாடுகளை சரிசெய்வதற்கும் பெறுகைத்திட்டத்தை சரியாக தயாரித்து | பிரதான பெறுகை திட்டமொன்று மற்றும் பெறுகை நேர அட்டவணையொன்றும் தயாரிக்கப்படல் |

| | | |
|---|---|---|
| | | அமுல்படுத்துவ வேண்டும். தற்கும் உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டது. |

**2.5 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு**

-------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | முற்பண பீ கணக்கின் வருடாந்த இணக்கக்கூற்றின் பிரகாரம் 24 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 215,322 மீதியொன்று மேலதிகமாக அறவிடப்பட்டதுடன் அந்த மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேலதிகமாக அறவிடப்பட்ட தொகையை எதிர்காலத்தில் உடனடியாக உரிய உத்தியோகத்தர்களுக்கு மீளச்செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | மேலதிகமாக அறவிடப்பட்ட கடன் தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சேவையிலிருந்து விட்டுச்சென்ற 13 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1,098,606 தொகை பெறவேண்டியிருந்ததுடன் அக்கடன் தொகையில் ரூபா 435,660 மீதியானது 2 வருடங்களிலிருற்து 3 வருடங்களிற்கிடையிலும் ரூபா 127,275 தொகை 4 வருடங்களிலிருந்து 5 வருடங்களிற்கிடையிலும் ரூபா 535,671 தொகை 5 வருடங்களுக்கு மேலாகவிருந்தது. | சேவையை விட்டுச்சென்ற ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கோவைகளையும் கடன் கோவைகளையும் பரீட்சிப்பதற்கும் மேலதிக நடவடிக்கையை எடுப்பதற்கும் இணங்கப்பட்டது. | சேவையை விட்டுச்சென்ற ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் கடன் நிலுவைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (இ) | சேவையிலிருந்து விட்டுச்சென்ற 05 உத்தியோகத்தர்களிடமிருந்து 05 ஆண்டுகளுக்கு மேலாக ரூபா 299,955 கடன் தொகை பெறவேண்டியிருந்ததுடன் அந்தத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சேவையை விட்டுச்சென்ற ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கோவைகளையும் கடன் கோவைகளையும் பரீட்சிப்பதற்கும் மேலதிக நடவடிக்கையை எடுப்பதற்கும் இணங்கப்பட்டது. | விட்டுச்சென்ற ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் கடன் நிலுவைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 130,551 தொகை அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் அந்தத் தொகையை அறவிடுவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கோவைகளையும் கடன் கோவைகளையும் பரீட்சிப்பதற்கும் மேலதிக நடவடிக்கையை எடுப்பதற்கும் இணங்கப்பட்டது. | இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் கடன் நிலுவைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

## 2.6 வங்கி கணக்குகளை செயற்படுத்துதல்

வங்கி கணக்குகளை செயற்படுத்துவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்ப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட குறைபாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கன்வெரா தூதரகத்திலுள்ள 402 ஏயுடீ பெறுமதியான 03 காசோலை மற்றும் வெர்லின் தூதரகத்திலுள்ள 110 யூரோ பெறுமதியான 03 காசோலைகள் 2010 தொடக்கம் 2017 வரையான காலப்பகுதிக்காக வைப்பிலிடப்பட்டிருந்தபோதிலும் இது மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தேறப்படவில்லை. | தேறப்படாத காசோலைகளை உடனடியாக தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தேறப்படாத காசோலைகள் தொடர்பில் பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | லொஸ்ஏன்ஜல் தூதரகத்தில் 2011 ஆம் ஆண்டில் திருடப்பட்ட 1583 ஐ.அ.டொலர்களும் மொஸ்கட் தூதரகத்தில் 2002 ஆம் ஆண்டில் மற்றும் 2003 ஆம் ஆண்டில் வைப்பு செய்யப்படாத பணமாக 155 ஐ.அ.டொலர்களும் வங்கி கணக்கிணக்க கூற்றினுள் காணப்படினும் அது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | லொஸ்ஏன்ஜல் தூதரகத்தில திருடப்பட்ட பணத்தினை கண்டுபிடிப்பதற்கு தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். மொஸ்கோ தூதரகத்தின் கணக்கீட்டின் போது இந்தத் தொகை தவறாக ஏற்பட்டமையால் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திருடப்பட்ட மற்றும் வைப்பு செய்யப்படாத பணமாக வங்கி கணக்கிணக்க கூற்றினுள் காணப்படுகின்ற மீதி தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயல்நடவடிக்கை திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வெளிநாட்டு அமைச்சால் வழங்கப்படுகின்ற சேவைகளாகிய கா.போ. த சாதாரண தரம் (ஓ/எல்) கா.போ.த உயர்தரம் போன்றவற்றின் சான்றிதழ்கள், பிறப்பு, விவாக மற்றும் இறப்புச் சான்றிதழ்களை சான்றுறுதிப்படுத்தும் சேவைகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்காக பதிவாளர் நாயகம் திணைக்களம் மற்றும் பரீட்சைத் திணைக்களத்துடன் இணைந்து இலத்திரனியல் ஆவண மதிப்பீட்டு முறைமையை (ஈ - டாஸ்) ஒண்றிணைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்த வேலையானது அறிக்கைத்திகதி வரையிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. | பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் முறைமையுடன் ஒண்றிணைப்பது தொடர்பான தொழில்நுட்ப கலந்துரையாடல் இறுதிக்கட்டத்திலிப்பதுடன் பரீட்சைத் திணைக்களத்துடனான கலந்துரையாடல் இப்போது முடிவடைந்தது.<br><br>இலத்திரனியல் ஆவண மதிப்பீட்டு முறைமையில் (ஈ - டாஸ்) முன்னைய ஆண்டின் போது நேரத்திற்கு நேரம் தொழில்நுட்ப வழுக்கள் ஏற்பட்டமையால் முறைமையானது எதிர்பார்க்கப்பட்ட இயலளவுடன் அமுல்படுத்தியிருக்கவில்லை. | மீளாய்வாண்டின் போதான நடவடிக்கைகள் முறையாக திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத்திட்டத்தில் அமைச்சின் கொன்சியூலர் பிரிவால் வழங்கப்பட்ட சேவைகளுக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்களை மீளச்சீரமைப்பதற்காக வர்த்தமானியை பிரசுரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கொரோனா நிலைமை காரணமாக ஏற்பட்ட போக்குவரத்து வரையறைகளுடன் அமைச்சினால் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியிருந்தமை, அந்த நேரத்தில் வெளிநாடுகளில் வாழுகின்ற இலங்கையர்கள் வேலைகளை இழந்தமை, மீளஅமர்த்தியமையால் கொன்சியூலர் கட்டணங்கள் அதிகரிக்கின்றமை, விமான பயணச்சீட்டுக்கள் அதிகரிக்கின்றமை, அத்தகைய நாடுகளில் வாழ்க்கைச் செலவு அதிகரித்தமை, இலங்கையிலும் இடரான நிலைமை காணப்பட்டமை போன்ற காரணங்களால் கொன்சியூலர் கட்டிணங்களை மீளச்சீரமைப்பதானது பிற்போடப்பட்ட போதிலும் கட்டிணங்களை மீளச்சீரமைப்பது தொடர்பான நடவடிக்கைகள் தற்போது இறுதிக்கட்டத்திலுள்ளது | கட்டணங்களை மீளச்சீரமைப்பதுக்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

.

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| அமைச்சினால் கொழும்பு 08, எல்விடிகல மாவத்தை, 117 வத்த மாடிவீட்டு வளாகத்தில் 20 வீடுகளை கொள்வனவு செய்யப்படுவதற்காக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு ரூபா 70,638,545 ஆன தொகை செலுத்தப்பட்டிருப்பினும் அதில் 17 வீட்டு அலகுகளுக்காக உறுதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வு திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு தொடர்ச்சியான கோரிக்கைகள் கோரப்பட்ட போதிலும் வெற்றிகரமான பதில்கள் இதுவரையிலும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | உரித்துரிமை பத்திரிகை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களுடன் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட சேதங்கள் மற்றும் விட்டுவிடுதல்கள் தொடர்பான அறிக்கையில் 02 ஆம் இலக்க வேலைத்திட்டத்தின் கீழ் வெளிநாடுகளில் அமைந்துள்ள தூதரகங்களில் 55 சம்பவங்களுடன் தொடர்பாக இன்னுமாக அறவிடப்படுவதற்கு, பதிவழிப்பதற்கு அல்லது விட்டுவிடுவதற்கு உள்ள ரூபா 29,185,385 ஆன பெறுமதி தொடர்பாக முன்வைக்கப்பட்டிருந்த கால பகுப்பாய்வின் பிரகாரம் அப் பெறுமதியில் ரூபா 2,254,421 ஆன தொகை 10 ஆண்டுகளை விஞ்சி காணப்பட்டதுடன் ரூபா 21,626,285 ஆன தொகை 05 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கும் இடையேயான கால வீச்சில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | குறித்துக்காட்டப்பட்ட குறைபாடுகளை திருத்துவதற்கு உடனடி நடவடிக்கையினை எடுப்பதற்கு இணங்கப்பட்டது. | விசாரணை செய்து தீர்ப்பனவு செய்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.4 முகாமைத்துவ நலிவுகள்**

**-------------------------------**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்காள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அவஸ்திரேலியா, சுவீடன், கென்யா இல் அமைந்துள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு சொந்தமான கட்டிடங்கள் இருந்தபோதிலும் அதனை உகந்த முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரச சொத்துக்களை உகந்த முறையில் பயன்படுத்துவதற்கு அறிவுறுத்தி சுற்றறிக்கை வழங்கப்பட்டிருந்ததுடன் வேண்டப்பட்டவாறு அறிவுறுத்தல்களை மீள வழங்குவதற்கும் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் எதிர்பார்க்கப்பட்டது. | சொத்துக்கள் உகந்த முறையில் பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | வெளிநாட்டு தூதரகங்களுக்காக பதவியணியினர் நியமிக்கப்படும் போது ஒவ்வொரு நாடுகளின் பிரகாரம் பயன்படுத்தப்படும் முறையான அளவுகோள்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அறிக்கையொன்று முன்வைக்குமாறு 2018 ஆகஸ்ட் 07 ஆம் திகதி நடத்தப்பட்ட அரச கணக்குகள் குழுவின் கட்டளை இலக்கம் 07 இன் ஊடாக பரிந்துரைக்கப்பட்டிருப்பினும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | .வெளிநாடுகளிலுள்ள இலங்கைத்துாதரகங்களிற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து அனுமதி நிபந்தனைகளை உள்ளடக்கி அறிக்கையொன்றை வழங்குவதற்கு கட்டளையிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க, அமைச்சால் தயாரிக்கப்பட்ட அறிக்கை அவதானிப்புக்களிற்காக 2019 மே 16 இல் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டது. | அரச கணக்குகள் குழுவின் கட்டளை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. மனித வளங்கள் முகாமைத்துவம்

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேறகொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| | --------------------------------------- | ------------------------------ | ------------- |
| (அ) | 369 அங்கீகரிக்கப்பட்ட இரண்டாந்தர ஊழியர்களினுள்ள மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் முறையே 74 மற்றும் 169 ஆக இருந்தமையால் உண்மையான எண்ணிக்கை முறையே 86 மற்றும் 207 ஆக இருந்தமையால் மிகையானது 12 மற்றும் 38 ஆகவிருந்தது. | அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III சேவையிலுள்ள 2019 ஆம் ஆண்டில் வேலைக்கமர்த்தப்பட்ட பட்டதாரி பயிலுனர்களை வேலைக்கமர்த்தும் போது மிகையாக இருப்பதை கருத்திற்கொள்ளாது அனைத்து உத்தியோகத்தர்களையும் ஒதுக்கப்பட்ட வேலைகளுக்கு அறிக்கையிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கு இணைந்த சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து கட்டளைகள் வழங்கப்பட்டது. அதற்கிணங்க, ஆட்சேர்ப்பு செயன்முறை பூர்த்தியடைந்த பின்னர் புதிய பதவிகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதனால், தூதரக சேவையில் காலப்பகுதியை பூர்த்திசெய்த பின்னர் மற்றும் வெளிநாட்டு அமைச்சிற்குரிய முகாமைத்துவ சேவைகள் அலுவலர்கள் அறிக்கையிட்டமையால் உத்தியோகத்தர்கள் மிகையாக காணப்பட்டதுடன் வருடாந்த இடமாற்றலலினூடாக மிகையான உத்தியோகத்தர்களை முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியைப் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |
| **(ஆ)** | 2009 பெப்ரவரி 20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க விசேட வர்த்தமானியில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பொது சேவைகள் ஆணைக்குழுவின் செயன்முறை விதிகளின் அத்தியாயம் xiii இன் 154 ஆம் பிரிவின் பிரகாரம் மற்றும் 157 ஆம் பிரிவின் பிரகாரமும் பொது சேவையிலிருந்து ஓய்வுபெற்ற உத்தியோகத்தரை மீள வேலைக்கமர்த்துவதற்குரிய அதிகாரம் பொது சேவைகள் ஆணைக்குழுவிற்கு மாத்திரம் வழங்கப்பட்டதுடன் அரச சேவைகளிடமிருந்து ஓய்வுபெற்ற நபரொருவர் ஒப்பந்த அடிப்படையில் மாத்திரம் மீளவேலைக்கமர்த்தப்பட முடியுமென்பதுடன் அத்தகைய நியமனம் ஒரு தடவையில் வருடமொன்றிற்கு வரையறுக்கப்பட ணேடியிருந்த போதும் ஓய்வுபெற்ற பெண் உத்தியோகத்தர் ஒருவர் பொது சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதியைப் பெறாது 03 வருடங்கள் காலப்பகுதிக்காக 2019 செப்தெம்பர் 01 இலிருந்து ரொறோன்டோ வெளிநாட்டுத் துாதரகத்தில் தனிப்பட்ட உதவியாளர் பதவிக்காக 2019 ஆகஸ்ட் 28 இல் நியமிக்கப்பட்டிருந்தார். | அரை அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்ற மேற்கூறப்பட்ட உத்தியோகத்தரின் நியமனம் தொடர்பாக அத்தகைய நியமனங்களை மேற்கொள்வதற்கான தேவைப்பாட்டை நிச்சயித்ததன் பின்னர் சொல்லப்பட்ட நியமனத்திற்காக மேவுகை செய்யும் அதிகாரத்தை தருமாறு கேட்கப்பட்டதுடன் பொது சேவைகள் திணைக்களத்தின் முன்னைய அனுமதி வெளிப்பட்டிருந்தது.<br><br>எதிர்காலத்தில் அத்தகைய நியமனங்களை மேற்கொள்கையில் பொது சேவைகள் திணைக்களத்திடமிருந்து முன்னைய தேவையான அனுமதியைப் பெறுவதற்கு அமைச்சானது நடவடிக்கை எடுக்கும். | பொது சேவைகள் திணைக்களத்தின் செய்முறை விதிகளிற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |